# பிரான்ஸ் மற்றும் ரோன்-எல்ப்ஸ் பிரதேசம்

**முன்னுரை:-**

உலகின் முதல்தர நாடுகளில் அரசியல் மற்றும் பொருளாதார நிலவரங்களை நோக்கும்போது கைத்தொழில் ரீதியாக முன்னேற்றமடைந்த ஒரு சிறந்த நாடாக பிரான்ஸ் முதன்மை பெறுகிறது. உலகமயமாக்கலிற்கு தனது பூரண ஆதரவை பிரான்ஸ் வழங்குகிறது. தமது இனவாத வேற்றுமைகளை தவிர்த்து, நாட்டின் பொருளாதார நிலையினை முன்னேற்றப்பாதைக்கு கொண்டு செல்வதற்காக இந்நாட்டவர்கள் பெரும் ஒத்துழைப்பை வழங்குகிறார்கள். பிரான்ஸின் வரலாற்று சரித்திரத்தினை நோக்கும்போது அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில் இன்று போலவே அன்றும் பிரான்ஸ் பெரும் முன்னேற்றத்தினை கண்டுள்ளது. சுய தன்னம்பிக்கையில் முன்னேறுவது, மனித உரிமைகள் மற்றும் குடியரசின் அடிப்படைக் கொள்கைகளை மதிப்பது போன்றவையே பிரான்ஸின் இந்த முன்னேற்றப்பாதைக்கு வழிகோலுகின்றது.

பிராந்திய சர்வதேச கூட்டுதாபனத்தின் செயற்பாடுகளை பரவச்செய்வதிலும், தனது நாட்டின் சுதந்திரத்திற்கு எவ்வித இடையூறுகளும் ஏற்படாதவாறு செயற்படுவதிலும் பிரான்ஸ் ஒரு சிறந்த ராஜ்யமாகும். ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு ஆலோசனை சபையின் அங்கத்தவராக கடமையாற்றியதோடு மட்டுமல்லாது அதன் சகல விடயங்களுக்கும் தனது பூரண ஆதரவையும் உதவிகளையும் பிரான்ஸ் வழங்கியுள்ளது. அபிவிருத்தி மற்றும் மனித உரிமைகளை பாதுகாப்பதுடன் உலகம் முழுவதும் வியாபித்துள்ள சமாதான நிகழ்வுகளுக்கு ஆதரவுடன் கூடிய உதவிகளை பிரான்ஸ் வழங்கியது.

ஐக்கிய நாடுகள் சபையின் வரவுசெலவு திட்டங்களிற்கு பரிபூரண ஒத்துழைப்பு வழங்குவதுடன் அதன் வரவுசெலவு திட்டங்களிற்கு உதவி வழங்கும் நாடுகளில் நான்காவது இடத்தை பிரான்ஸ் தனதாக்கிக் கொண்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபைக்கு 2001 ஆம் ஆண்டு 68.85 யூரோ மில்லியன் ரூபா உதவி வழங்கியதோடு மட்டுமின்றி ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பினராக விளங்கும்

ஒரு தலைசிறந்த நிறுவனத்திற்கு 125.55 யூரோ மில்லியன் ரூபா உதவியும் வழங்கியுள்ளது.

விஞ்ஞான, தொழிநுட்ப மற்றும் கல்வி தகமைகளை பிரான்ஸின் சகல பிரதேசங்களுக்கு மட்டுமன்றி தனது அண்டைய நாடுகளுக்கும் பராபட்சமின்றி வழங்கியது. உலகின் 91 நாடுகளில் பிரான்ஸ் 224 வேளாண்மை ஸ்தாபனங்களை நிறுவியுள்ளது. தனது நாட்டு தேசிய மொழியான பிரெஞ்சு மொழியினை [French] ஏனைய நாட்டு மக்களும் அறிந்திருக்க வேண்டும், கற்க வேண்டும் என்பதனால் உலகம் முழுவதிலும் பிரான்ஸசைஸ் [Francaise] போன்ற 263 ஸ்தாபனங்கள் அமைக்கப்பட்டுள்ளது. உலகமயமாக்கலை இணைப்பது மற்றும் அதற்கு ஒத்துழைப்பு வழங்குவதில் பிரான்ஸ் முன்னனி வகிப்பது மட்டுமல்லாது உலகமயமாக்கல் பற்றிய மேலதிக விடயங்களை விரிவுபடுத்துவதற்காக உலகம் முழுவதிலும் 1,774,200 பிரான்ஸ் நாட்டவர்கள் குடியமர்ந்துள்ளார்கள்.

பிரான்ஸ் 2003 ஆம் ஆண்டின் முதல்பகுதியிலேயே 1.2 சதவீத தேசிய உற்பத்தியினை மேற்கொண்டுள்ளார்கள். 2002 ஆம் ஆண்டில் சந்தைபடுத்தல் மூலம் 27.3 மில்லியன் டொலரினை பெற்றுள்ளது. பொருளாதார ரீதியினை நோக்கும்போது உலகிலேயே மிகவும் பலம் வாய்ந்த நாடுகளில் 4 வது இடத்தை பிரான்ஸ் தட்டிச்சென்றுள்ளது. அதுமட்டுமின்றி 60 சதவீத நிலப்பகுதியை வேளாண்மைக்காக ஒதுக்கி அத்துறையிலும் சிறந்த முன்னேற்றம் கண்டுள்ளது. தானியங்கள், வைன், பால் ஆகியவற்றை சிறந்த முறையில் உற்பத்தி செய்து உலகினிலேயே இரண்டாவது நாடாக பிரான்ஸ் இடம்பெறுகிறது. தற்போதைய நிலவரப்படி 66 மில்லியன் டொன் தானியம், 23 மில்லியன் லீட்டர் பால் மற்றும் 54 மில்லியன் ஹெக்டோ லீட்டர் வைன் உற்பத்தியினை மேற்கொண்டுள்ளது. விஞ்ஞான தொழிநுட்பம் மற்றும் புதிய கண்டுபிடிப்புகளுக்கான பரிசோதனைகள் போன்றவற்றின் முன்னேற்றப்பாதைக்கு வழிவகுப்பதில் பிரான்ஸ் ஒரு தலை சிறந்த நாடு.

சிவில் இன்ஜினியரிங் மற்றும் கட்டிடக்கலை துறை மூலம் 93.15 யூரோ மில்லியன் உற்பத்தியினை பிரான்ஸ் பெற்றுக்கொண்டது. விவசாயம் மற்றும் உணவு உற்பத்தி துறையில் 3 இலட்சத்து 98 ஆயிரம் தொழிலாளர்களை வேலைக்கமர்த்தி வருடத்திற்கு 119.9 யூரோ மில்லியன் மற்றும் இராசயன துறையில் 236500 தொழிலாளர்களை வேலைக்கமர்த்தி வருடத்திற்கு 70.12 யூரோ மில்லியன் உற்பத்தியினை பிரான்ஸ் பெற்றுக்கொண்டுள்ளது. 94500 தொழிலாளர்களை வேலைக்கமர்த்தி வருடத்திற்கு 28.4 யூரோ மில்லியன் ஔடத உற்பத்தியினை மேற்கொண்டுள்ளது. 222000 தொழிலாளர்களை வேலைக்கமர்த்தி ஆடை உற்பத்தி மற்றும் போகப் பொருள் உற்பத்தி துறைகளில் 31.4 யூரோ மில்லியன் உற்பத்தியினை உறுதிசெய்துள்ளது.

ரயில்சேவை, கப்பல்சேவை மற்றும் விமானசேவை முதலியன பிரான்ஸின் மிகவும் முன்னேற்றம் கண்ட சேவைகளாகும். கடல் வாணிபத் துறையிலும் பிரான்ஸ் சிறந்த முன்னேற்றம் கண்டது மட்டுமல்லாது தந்தி பரிமாற்றல் முறையிலும் கூட சிறந்த முன்னேற்றம் கண்டுள்ளது. ஆபிரிக்கா, மத்திய கிழக்கு நாடுகள், தென் கிழக்கு ஆசிய நாடுகள் ஆகிய நாடுகளுடன் எண்ணற்ற தொழிநுட்ப ஒப்பந்தங்களுக்கு பிரான்ஸ் கைச்சாத்திட்டுள்ளது. உலக வர்த்தக ஸ்தாபனத்திற்கு ஆதரவு வழங்கியதோடு மட்டுமல்லாது ஏற்றுமதி வியாபாரத்துறையில் உலக ரீதியில் மிகப் பெரிய அளவில் ஏற்றுமதி செய்யும் நாடாக பிரான்ஸ் விளங்குகின்றது.

பிரான்ஸின் அபிவிருத்திக்கு சுற்றுலா சேவை பெரும் பங்களிப்பு ஆற்றிவருகின்றது. உலக நாடுகளில் சகல பிரதேசங்களிலிருந்தும் வருடத்திற்கு 77 மில்லியன் சுற்றுலா பயணிகள் பிரான்ஸிற்கு வருகை தந்து கொண்டிருக்கிறார்கள். கலை, வேளாண்மை, சங்கீதம், உணவுமுறை மற்றும் நாகரிகம் போன்றவற்றிலும் கூட பிரான்ஸ் ஏனைய நாடுகளிலும் பார்க்க சிறப்பான முன்னேற்றம் கண்டுள்ளது. இந்த முன்னேற்றமே அதிக அளவிலான உல்லாசப்பயணிகளின் வருகைக்கு காரணமென பிரான்ஸின் சுற்றுலா அமைச்சு தெரிவிக்கிறது. உல்லாசப்பயணிகளின் சொர்க்கமாக பிரான்ஸின் “மெட்ரோபோலிஸஸ்“ (Metropolises) பிரதேசம் அமைந்துள்ளது. ஒரு

வருடத்திற்கு 25.6 யூரோ மில்லியன் பெறுமதியான வருவாயை சுற்றுலாதுறையின் முலம் பிரான்ஸ் பெற்றுள்ளது. உல்லாசப் பயணிகளின் வருகையினால் சுற்றுலா துறையில் முன்னேற்றம் கண்டுள்ள நாடுகளில் முதலிடத்தை அமெரிக்காவும், இரண்டாவது இடத்தை இத்தாலியும், முன்றாவது இடத்தை பிரான்ஸும் தட்டிச் சென்றுள்ளன.

**பிரான்ஸ் - ஐரோப்பா கண்டத்தில் அமைந்த ஒரு நாடு.**

பிரான்ஸ் ஐரோப்பா கண்டத்தின் அமைந்த ஒரு நாடாகும். பிரான்ஸ் ஐரோப்பா சமூகத்தின் உறுப்பினராக இருந்தது. பரிஸில் நடந்த ஐரோப்பா சமூக உடன்படிக்கை ஒன்றில் 1951 ஆம் ஆண்டு பிரான்ஸ் கைச்சாத்திட்டுள்ளது. ஜெர்மனி, பிரான்ஸ், பெல்ஜியம், இத்தாலி, லக்ஸன்பெர்க், நெதர்லாந்து ஆகியவையே ஐரோப்பா சமூகத்தின் அங்கத்துவ நாடுகளாகும். இந்த உடன்படிக்கையின் முக்கிய காரணம் அப்பிரதேசங்களில் காணப்பட்ட நிலக்கரி மற்றும் இரும்பு தொழிற்சாலைகளை கையாளுவதற்கு சிறந்த அதிகாரிகளை உருவாக்குவதாகும். 1957 ஆம் ஆண்டு ரோம்(Roma)ராஜ்ஜியம் சேர்ந்தது மட்டுமன்றி ஐரோப்பா சமூக அபிவிருத்தியும், European Atomic Energy Community யும் இவ் உடன்படிக்கையில் சேர்த்துக்கொள்ளப்பட்டது. 1973 இலிருந்து 1995 வரை காலப்பகுதியினுள் மேலும் பல நாடுகள் சேர்ந்தன. தற்போது ஐரோப்பா சமூகத்தில் 15 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. ஆவையாவன பிரித்தானியா, கீறிஸ், அயர்லாந்து, டென்மார்க், ஜெர்மனி, பிரான்ஸ், பெல்ஜியம், இத்தாலி, ஸ்பெயின், போர்த்துகல், லக்ஸம்பர்க், நெதர்லாந்து, சுவீடன், பின்லாந்து, ஆஸ்திரியா.

ஐரோப்பாவின் சனத்தொகை 379 மில்லியன் ஆகும். 1992 இல் மாஸ் ஸ்றிஜ் (Maastricht)எனும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட ஐரோப்பா தனது கடமைகளை பல பிரிவுகளாக கிளை பரப்பியது. கலாசாரம், கல்வி, நுகர்வோர் பாதுகாப்பு பொதுப்பணம் ஆகியவற்றுக்கு ஐரோப்பா சமூகத்தை உட்படுத்துவதே இவ்வொப்பந்தத்தின் நோக்கமாகும். பிரான்ஸ் பொருளாதாரஅபிவிருத்தி, சமூகம் மற்றும் monitary ஆகிய கடமைகளை நிறைவேற்றுவதில், தன் சக நாடுகளின் நலன் கருதி தன்னை ஈடுபடுத்தி கொண்டுள்ளது.

பிரான்ஸ் 1992 இலேயே மாஸ் ஸ்றிஜ்(Maastricht)ஒப்பந்தத்திற்கு உள்ளாகியது. 2002 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி யூரோ எனும் பொதுப்பெயரிலான பணம் நடைமுயையில் வந்தது. இதன்மூலம் ஐரோப்பா சமூகத்தின் அங்கத்துவ நாடுகள் பெரும் சக்தியை பெற்றன. பொதுச்சந்தை ஒன்றும் சமூகம் ஒன்றுமாக மாறிய ஐரோப்பா பிரிந்திருந்த பகுதிகளில் இருந்த பிரச்சினைகளை தீர்த்து வைத்தது. இதுவே வியாபாரம், போக்குவரத்து மற்றும் தொழிலாளர் சங்கம் போன்ற பொது தேவைகளின் முன்னேற்றத்திற்கு வழிவகுத்தது மட்டுமன்றி ஐரோப்பா சமூகத்தினுடாக ஒன்றுபட்ட அரசியல் மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கு காரணமாகின.

2000 ஆம் ஆண்டில் ஐரோப்பா சமூகத்தினுடாக 10529 பில்லியன் டொலர் தேசிய உற்பத்திகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வுற்பத்தி வடஅமெரிக்காவின் தேசிய உற்பத்திக்கு சமனாகும். உலக வியாபாரத்திற்கு ஐரோப்பா சமூகத்தின் உற்பத்தியை கொள்வனவு செய்யும்போது முதல்தர உதவிகளை ஏற்றுக்கொண்டது. 1999 ஆம் ஆண்டு உலகின் தானிய கொள்வனவின்போது 13.1 சதவீதம் ஐரோப்பா சமூகத்திற்கு வழங்கியுள்ளது. ஒயில்சிட்ஸ்(Oilseeds)கொள்வனவில் 3.5 சதவீதமும், வைன் கொள்வனவில் 41.5 சதவீதமும், பால் கொள்வனவில் 20.2 சதவீதமும் ஐரோப்பா சமூகமே தனதாக்கிக் கொண்டுள்ளது. உலகிலேயே 31.9 சதவீத பங்கீடுதலை செய்தது ஐரோப்பா சமூகம் ஆகும். ஐரோப்பா சமூகத்தின் உறுப்பினரான பிரான்ஸ் சகல பிரதேசங்களின் அபிவிருத்தியினை முன்னிட்டு அனைத்து ரீதியிலும் ஒத்துழைப்பு வழங்கியது.

ஐரோப்பா சமூகத்தின் உறுப்பினர்களோடு நடத்திய வியாபாரத்தில் 63 சதவீதத்தினை கைப்பற்றியதன்காரணமாக விவசாய உற்பத்தியின் பெரும்பகுதியை ஐரோப்பா சமூகத்திற்கு வழங்குவதற்கு பிரான்ஸ் முன்வந்துள்ளது. தானியம், சீனி, ஒயில்சீட்ஸ் ஆகியவற்றின் உற்பத்தியில் முதல் ஸ்தானத்தை பெற்றது. ஜெர்மனி, இத்தாலி, ஸ்பெயின், பெல்ஜியம், லக்ஸம்போர்க், யுகெ ஆகிய நாடுகளுடன்

பிரான்ஸ் தனது வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டது. நீண்டகால பொருளாதார முன்னேற்றத்திற்கு நடவடிக்கைகள் மேற்கொண்ட பிரான்ஸ் ஐரோப்பா பிரதேசத்தினுள் நேரடியாக முதலீடு செய்வதற்கு பெரும் ஆர்வம் காட்டிவருகிறது. இதன் காரணமாக பிரான்ஸ் அயல் நாடுகளுடன் உறவு கொண்டுள்ளது.

MAPI, நோபிலீஸ்(Nobilis), பிளாஸ்டிக் ஒமினியம் S.A(Plastic Omnium S.A), கேரேபோர்(Carrefour)ஆகிய நிறுவனங்களில் ஸ்பெயின் மற்றும் ஸ்லோவாக்கியா ஆகிய நாடுகளே சகல மூலதனங்களையும் நடாத்தியுள்ளது. இந்நிறுவனங்கள் யாவும் பிரான்ஸில் முன்னனியில் இருக்கும் நிறுவனங்களாகும். இந்நிறுவனங்களில் பெருந்தொகைப்பணம் மூதலீடு செய்துள்ளதோடு அந்நிறுவனங்களே விவசாய துறையின் உற்பத்திகளை மேற்கொள்கின்றன.

**பிரான்ஸ் - இயற்கை**

பிரான்ஸ் ஐரோப்பா கண்டத்தில் அமைந்துள்ள ஒரு நாடாகும். பிரான்ஸ் 550000 கிலோ மீற்றர் நிலப்பரப்பினை கொண்டதாகும். விவசாய நிலங்கள், பசுமை நிறைந்த காடுகள், மலைத்தொடர்கள் மற்றும் 5500 கிலோ மீற்றர் பரப்பு கொண்ட நீர் பிரதேசமும் பிரான்ஸின் இயற்கை சொத்துக்களாகும். சுற்று சுழல் பாதுகாப்பிற்காக பிரான்ஸ் விசேட கவனம் செலுத்தி வருகின்றது. இதன்படி இயற்கைக்காடுகள், தேசிய பூங்காவனங்கள், கடற்கரை பிரதேசங்கள் ஆகியவற்றை புணரமைப்பதற்கான விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. பிரான்ஸின் வாழும் சனத்தொகையின் அளவு 60.2 மில்லியனாகும்.

2003 ஆம் ஆண்டில் பெற்றுக்கொண்ட அறிக்கையின்படி இங்கு 26.5 தொழிலாளர்கள் வாழ்கிறார்கள். பிரான்ஸ் 52 பிரதேசங்களாக பிரிக்கப்பட்டு அவற்றிலேயே மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். பிரான்ஸில் பரிஸ், லீயோன், மாசேய், லீல், டுலுஸ் என பிரதான ஐந்து நாகரிக நகரங்கள் உள்ளன. பரிஸில் 2.1 மில்லியன், லீயோனில் 1.2 மில்லியன் தொழிலாளர்கள் உள்ளனர். பிரான்ஸ் 22 பிரிவுகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. இதனுள் அரசாங்க மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் அதிகளவில் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு பாராளுமன்ற

முறையிலேயே ஆட்சி செய்யப்படுவதுடன் தேசிய சபை, செனட் சபை என இரு சபைகளும் உள்ளன. இங்கு ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரம் கொண்டவராகவே காணப்படுகிறார். பாதுகாப்புத்துறை மற்றும் அவசரகால சட்டம் போன்றவற்றில் எவ்விதமான தீர்வுகளையும் எடுக்கும் அதிகாரம் அவருக்கு உண்டு. 2004 ஆம் ஆண்டு பிரான்ஸின் பொது தேசிய உற்பத்தியின் கேள்வி 1.6 சதவீதமாக முன்னேற்றமடைந்துள்ளது.

பிரான்ஸ் தனது வெளிநாட்டிற்கான நேரடியான முதலீட்டை எவ்வித இடையூறுகளுமின்றி செய்வதால் வெளிநாடுகளிலிருந்து மிகுந்த கேள்வி எழுப்பப்படுகிறது. உலக வியாபார சங்கத்திற்கு எதிராக பல ஒப்பந்தங்களில் பிரான்ஸ் கைச்சாத்திட்டுள்ளது. உலகளாவிய ரீதியில் வியாபாரத்தின் மூலம் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதே இவ்வொப்பந்தத்தின் நோக்கமாகும். உதாரணமாக பிரான்ஸ் 3.9 மில்லியன் டொலரை சிங்கப்பூரில் முதலீடு செய்துள்ளது. வியாபார நடவடிக்கைகளில் தோள்கொடுக்கும் நாடுகளில் உலகினிலேயே முதலாவது நாடாக யப்பானும் இரண்டாவது நாடாக பிரான்ஸும் திகழ்கின்றது.

1999 ஆம் ஆண்டின் இறுதிகால கட்டத்தினுள் 35 யூரோ பில்லியனை முதலீடு செய்துள்ளது. யப்பானில் உள்ள டைகின் கெமிகல் நிறுவனத்தில் (Dhaikin Chemical Company)பிரான்ஸ் 20 யூரோ மில்லியன் முதலீடு செய்துள்ளது. இந்நிறுவனத்தின் உற்பத்தி பிரிவினை பிரான்ஸின் லீயோன் நகரில் அமைப்பதற்காகவே இம்முதலீடு செய்யப்பட்டுள்ளது. வேளாண்மை, கைத்தொழில், விஞ்ஞானம், தொழிநுட்பம், சுற்றுலா, ஆடை உற்பத்தி ஆகிய துறைகளில் இம்முதலீட்டை ஈடுபடுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. அபிவிருத்தி அடைந்த, அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் இவ்வாறான முதலீடுகளை மேற்கொள்வதில் ஒரு பகுதியினராக கடமையாற்றுவதற்கு பிரான்ஸ் நடவடிக்கை எடுத்துள்ளது.

ரோன் - எல்ப்ஸ் பிரதேசம்

ரோன் மற்றும் ஸ்னோவே எனும் இரு கங்கைகளின் நடுவில் அமைந்துள்ள இப்பிரதேசம் 43700 கிலோ மீற்றர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. சமவெளி மற்றும் குன்றும் குழியுமான பூகோள அமைப்பினை கொண்டதோடு நீரேந்தும் பிரதேசங்களை கொண்டதாகவும் அமைந்துள்ளது. இப்பிரதேசததில் வாழும் மக்கள் தொகை 5.5 மில்லியனாகும். பரிபாலனத்திற்காக இப்பிரதேசம் 8 பிரதேசங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.

அவையாவன ஏயின், ஆசேஸ், டோரம், ஈசர், லுவா, ரோன், சவுவா, ஒரிசலுவா. இப்பிரதேசம் பிரரோச சபை மற்றும் பிரதேச பொருளாதார
இந்த பிரதேசம் பிரதேச சபையுடனும் பிரதேச பொருளாதாரத்துடனான சமூகம் ஒன்றினால் நிறுவாகம் செய்யப்படுகிறது. ரோன் எல்ப்ஸ் பிரதேசத்தினுள் பிரதான 3 நகரங்கள் உள்ளன. அவை லீயான், கிறேனபல், சேன்டிஎடின்ன. இதில் பிரதான நகரமான லீயோனில் 1.2 மில்லியன் மக்கள் வாழ்கிறார்கள். யுனெஸ்கோ அமைப்பினால் இந்த நகரத்தை உலக உரிமைகளின் ஒன்றாக பிரகடனப்படுத்தபட்டுள்ளது. கலை, கலாசாரம் கல்வி என்பன ஆரம்பகாலம் தொட்டே இருந்து வந்ததுடன் பிரபல்யமான தேவஸதானங்களும், பல்கலைகழகங்கள், வியாபார ஸ்தாபனங்கள், உணவு விடுதிகள் என்பவற்றினால் இந்நகரம் நிறைந்துள்ளது.

இந்த நகரத்தில் வாழும் மக்கள் உயர் கலாசாரத்தின் உரிமையாளர்களாகும். லீயோன் நகரமானது 9 மாவட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு நகராதிபதியும் ஒரு நகரசபையும் அமைந்திருப்பதுடன் இதனுடாக நகரின் அபிவிருத்தி திட்டங்களும் நகரவாசிகளின் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன. கைத்தொழில் மற்றும் வியாபாரத்தின் கேந்திர நிலையமாக லீயோன் நகரம் விளங்குகின்றது. இங்கு

செழிப்பான விளைநிலங்களும் பள்ளத்தாக்குகளும் மலைத்தொடர்களும் நகரை அலங்கரிக்கின்றன. இதில் விவசாயமும் திராட்சையும் பயிர் செய்யப்படுகின்றன. உணவுப்பொருட்கள், வைன் என்பன உற்பத்தி செய்யப்படும் முக்கிய நகரமாக லீயோன் விளங்குகின்றது.

சோன்-ரோன் என்ற இரு நதிகள் இந்த நகரத்தினுடாக மத்திய கடலை வந்தடைகிறது. அதனுடாகவே போக்குவரத்து பாதை அமைந்துள்ளது. இந்த நதிகளை மையமாகக் கொண்டு பொளாதார அபிவிருத்தியின் காரணமாக தொழில் வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன. மொத்த தேசிய உற்பத்தியில் 10 சதவீதத்தினை பிரான்ஸிற்கு லீயோன் நகரமே பெற்றுக்கொடுக்கிறது. சிறிய மற்றும் மத்திய பரிமானம் கொண்ட கைததொழில் துறை நிறுவனங்களின் நிர்வாகத்திற்கு பிரதேச பரிபாலனம் உதவி செய்கிறது. நவீன தொழிநுட்பத்தை அபிவிருத்தி செய்வதற்கும் இந்த பரிபாலன சபைகள் பெரிய நிறுவனங்களிற்கு உதவுகின்றது.

புவியியல் ரீதியாக அடிப்படை வசதி கொண்ட லீயோன் நகரத்தில் வியாபாரம் செய்வதற்கு தகுந்த சுழல் காணப்படுகிறது. வினோதமாக பொழுதை கழிப்பதற்கான பொழுதுபோக்கு அம்சங்கள் பல இந்நகரினுள் அமைக்கப்பட்டுள்ளது. சுற்றுலாதுறையின் அபிவிருத்திக்கு இப்பொழுதுபோக்கு அம்சங்கள் பெரிதும் உதவியளித்துள்ளன. மலைத்தொடர்களை அண்மித்தே சுற்றுலாதுறை பெரும் முன்னேற்றம் கண்டுள்ளதோடு மேலும் மேற்கு ஐரோப்பிய நாடுகளின் வைன் உற்பத்தியில் முக்கிய இடமாக லீயோன் நகரமாகும். வியாபார, கைத்தொழில் என்பனவற்றின் முன்னேற்றும்வகையில் நிர்வாக நிறுவனங்களும் வழிகாட்டும் நிறுவனய்களும் அமைக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் உள்ளுர் வியாபாரம் கவனிக்கிறது. சிறிய மற்றும் மத்திய பரிமான கைத்தொழிலாளர்களின் அமைப்பு உதவி செய்கிறது. இவ்வமைப்பில் 8000 உறுப்பினர்கள் வரை இருக்கின்றனர்.

இங்கு நடைபெறுகின்ற வியாபார நடவடிக்கைகளுக்கு தேவையான பொருட்காட்சிகள், வங்கி கொடுக்கல்வாங்கல்கள், அரசாங்க நிறுவனங்களில் பங்குபற்றுவதற்கான உரிமை சகல உறுப்பினர்களுக்கும் உண்டு. இங்கு உயர் முகாமைத்துவம் சம்பந்தமான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. சர்வதேச ரீதியாக

நடைபெறுகின்ற வைபவங்களுக்கு பிரதிநிதிகளை அனுப்புவதும் இந்நிறுவனங்களினாலேயே மேற்கொள்ளப்படுகின்றன. சிறிய மத்திய பரிமான கைத்தொழில் சம்பந்தமான அமைப்பு நிறுவனங்களின் சகல சேவைகளுக்கும் உதவிகள் வழங்குகின்றன.

உல்லாசப் பயண கைத்தொழில்

இலங்கையிலும் மாலைத்தீவிலும் உல்லாசப் பயணக் கைத்தொழிலுக்கான பல வசதி வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. இன்வெஸ்டர் சேர்விஸஸ் நிறுவனம் காணி விற்பனை, சந்தைப்படுத்தல், முதலீட்டு ஊக்குவிப்பு, இயந்திர சாதனங்களுக்கான முதலீடுகள், ஹோட்டல் கைத்தொழில் போன்ற துறைகளில் அனுபவம் பெற்றவர்களை விநியோகிக்க ஏற்பாடுகளை மேற்கொண்டிருக்கிறது. அந்த நிறுவனம் முதன்மை வகிக்கும் நிறுவனங்களையும் முதலீட்டாளர்களையும் சுற்றுலாத்துறையில் சேவை வழங்குனர்களையும் தெரிவு செய்திருக்கிறது. இதன் ஊடாக இலங்கைக்கும் பிரான்சிற்கும் இடையிலான வர்த்தகத் தொடர்புகள் மேம்படுவதற்கு வழிபிறக்கிறது. இவற்றின் ஊடாக சர்வதேச தராதரங்களுக்கு அமைய துரித சேவைகள் வழங்கப்படவிருக்கின்றன. பிரான்ஸ், ஐரோப்பிய சமூகம் ஆகிவற்றின் சட்டதிட்டங்களுக்கு அமைய நடந்து கொள்ளுமாறு முதலீட்டாளர்களை வழிநடத்துவதற்கும், அவர்களுக்கு உதவி செய்வதற்கும் இன்வெஸ்டர் சேர்விஸஸ் நிறுவனம் நடவடிக்கை எடுக்கும்.

பிரான்சின் வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பான வழமையான சட்டதிட்டங்கள்.

01. பிரான்ஸ் இறக்குமதி செய்யும் அனேகமான பொருட்களுக்கு அந்நாட்டில் இறக்குமதித் தீர்வை அமுல் செய்யப்படுவதில்லை. சிலவற்றிற்கு குறைந்த தொகையே அறவிடப்படுகிறது.

02. விவசாய உற்பத்திகள் தொடர்பான ஐரோப்பிய சமூகத்தின் சட்டதிட்டங்களை பிரான்ஸ் கடுமையாக அமுல் செய்கிறது.

03 பிரான்சிற்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்காக 5 சதவீதத்திற்கும் 17 சதவீதத்திற்கும் இடைப்பட்ட தொகை இறக்குமதித் தீர்வையாக அறவிடப்படுகிறது.

04. வெளிநாட்டு உற்பத்திகளை பிரான்சிற்குத் தருவிக்கும்போது இறக்குமதித் தீர்வை அறவிடப்படுகிறது.

05. இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 19.6 சதவீத வெட் வரி விதிக்கப்படுகிறது. விவசாய உற்பத்திகள், உணவுப் பொருட்கள், தெரிவு செய்யப்பட்ட மருந்துவகைகள் ஆகியவற்றுக்காக 5.5 சதவீத வரி விதிக்கப்படுகிறது.

06. இறக்குமதி அல்லது ஏற்றுமதித் தொகை 125,000 யூரோக்களைத் தாண்டும் பட்சத்தில் அந்தப் பேரத்தை அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றின் ஊடாக மேற்கொள்ள வேண்டும்.

07. இறக்குமதி, ஏற்றுமதி நடைமுறைகள் தொடர்பான அங்கீகரிக்கப்பட்ட ஆவணங்களை சமர்ப்பிப்பது கட்டாயமானது.

08. வர்த்தக கட்டளைப் பத்திரத்தில் கீழ்வரும் அம்சங்கள் இடம்பெற வேண்டும். அவை ஆங்கிலம் அல்லது பிரெஞ்சு மொழில் குறிப்பிடப்படல் வேண்டும்.

- ❖ விநியோகத்தர் மற்றும் இடைத்தரகரது பெயர் விபரங்கள்
- ❖ கட்டளைப் பத்திரம் விநியோகிக்கப்பட்ட திகதியும், இடமும்
- ❖ கப்பலில் ஏற்றப்படும் விதம்
- ❖ உரிய பொதிகளில் இடம்பெறும் எண் வரிசைகள்
- ❖ உரிய பண்டங்களின் விபரங்கள் - வகை, தரம், பெறுமதி சேர்க்கப்பட்ட பொருளானால் அது பற்றிய விபரங்கள்
- ❖ பண்டங்களின் எண்ணிக்கை
- ❖ உடன்பட்ட விலை – அலகின் பெறுமதி, மொத்த பெறுமதி, காப்புறுதி மற்றும் கொள்கலன் பரிமாற்றக் கட்டணங்கள்
- ❖ ஏற்றிச்செல்வதற்கான மற்றும் கொடுப்பனவை செலுத்துவதற்கான நிபந்தனைகள்
- ❖ ஏற்றுமதி நிறுவனத்தின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரது ஒப்பம்

இவ்வாறான துறைகள் பற்றி இன்வெஸ்டர் சேர்விஸஸ் நிறுவனம் தொழிற்துறைசார்ந்த தகவல்களை வழங்கும். இதன் பிரகாரம், நம்பிக்கையுடன் வெற்றிகரமாக பிரான்சின் வர்த்தக சந்தைக்குள் பிரவேசிப்பதற்கு ஏற்றுமதியாளர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும். சகல வழிகளிலும் செல்வச் செழிப்பு

மிக்க பிரான்சில் மாத்திமன்றி ரோன் அல்ப்ஸ் பிராந்தியத்திலும் விசேடமான வர்த்தக வாய்ப்புக்கள் இருக்கின்றன. இந்தியத் துணைக் கண்டத்தைச் சேர்ந்த நிறுவனங்கள் பிரான்சின் வர்த்தக சந்தைக்குள் பிரவேசிக்க திட்டமிடுமானால், அவற்றுக்கு சகல தகவல்களையும் வழங்குவதற்கு இன்வெஸ்டர் சேர்விஸஸ் நிறுனம் தயாராக இருக்கின்றது. பிராந்திய வர்த்தகத்தை உறுதி செய்து, அபிவிருத்தி செய்வதற்கு முன்வரும் அனைத்து அமைப்புக்களும் நாம் உதவி செய்வோம். இலங்கையில் கொழும்பு 01, லோட்டஸ் வீதி, இலக்கம் 64 இல் அமைந்திருக்கும் கலதாரி ஹோட்டலின் முதல் மாடியின் 128 இலக்க அறையில் சகல விடயங்களையும் பெற்றுக் கொள்ள முடியும்

எமது தொலைபேசி இலக்கம் : 941239300
எமது இணையத்தள முகவரி : www.is-asia.net
எமது மின்னஞ்சல் முகவரி : admin@is-asia.net